**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு ஜீலை மாதம் 16ம் தேதி திங்கட்க் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 1</u>**

1920.ம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 124டி(2)ன் கீழ் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி விகிதத்தை உயர்வு செய்ய அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கடையநல்லூர் நகராட்சி தனி அலுவலரின் 24.05.18ம் தேதிய 124.எண் தீர்மானத்தில் கடையநல்லூர் நகராட்சியில் தற்போது அமுலில் உள்ள தொழில்வரி விகிதத்தில் 01.10.2018 முதல் 35 விழுக்காடு உயர்வு செய்ய இசைவு அளிக்கப்பட்டது. இது குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் விளம்பரம் செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் தக்க காரணங்களுடன் எழுத்து மூலமாக கடையநல்லூர் ஆணையாளருக்கு தெரிவிக்கும்படியான அறிவிக்கை 07.06.18ல் தினசரி நாளேட்டில் விளம்பரம் செய்யப்பட்டது, இதுசார்பாக நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுடைந்துவிட்டது மேலும் இதுசார்பாக ஆட்சபேனை ஏதும் பெறப்படவில்லை என்பதால் கீழ்க்கண்டவாறு 01.10.18 முதல் தொழில் வரி உயர்வு செய்ய மன்றம் இசைவு வழங்கலாம்

| வ. எ ண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2013 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வரும் தொழில்வரி தொகை (அரையாண்டு ஒன்றுக்கு) | 01.10.2018 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்வரி தொகை (அரையாண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | 21001 முதல் 30000 வரை | 120/ | 165/ |
| 3 | 30001முதல் 45000வரை | 300/ | 405/ |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590/ | 800/ |
| 5 | 60001 முதல 75000 வரை | 890/ | 1200/ |
| 6 | 75001ம் அதற்கு கூடுதல் | 1180/ | 1600 வரையறை ரூ.1250/ |

**(ந.க.எண். 2055 /2018/அ2)**

**<u>தீர்மானம் எண். 175</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

தனிஅலுவலர்,
கடையநல்லூர் நகராட்சி.